‘நீட்’ – EWS–ஐ எதிர்த்து இரு சக்கர வாகனப் பிரச்சாரத்துக்கு தடையா?

# சமூக நீதிப் பிரச்சினையில் கை வைப்பது, சமூக விரோதச் செயலே!

## த.வெ.க. அரசுக்கு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கண்டனம்!

சென்னை, ஜூலை 31-

‘நீட்’, EWS-சை எதிர்த்து இரு சக்கர வாகனப் பரப்புரைப் பயணத்துக்குத் தடையா? தடையை மீறி இந்தப் பிரச்சாரப் பயணத்தை நடத்த முடியும் என்றாலும், முதலில் சட்ட ரீதியாக இப்பிரச்சினையைக் கழகம் அணுகும்! தோழர்கள் அமைதி காக்க வேண்டுகிறோம்! சமூகநீதிப் பிரச்சினையில் கை வைப்பது, சமூக விரோதச் செயலே! பிரச்சாரப் பயணத்தைத் தடை செய்த தமிழ்நாடு அரசை வன்மையாகக் கண்டிக்கின்றோம்! என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

‘நீட்’ தேர்வையும், உயர்ஜாதியினருக்கான EWS இட ஒதுக்கீட்டையும் முழுமையாக ரத்து செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்தி, திராவிடர் கழக இளைஞரணி, திராவிட மாணவர் கழகம், திராவிட மகளிர் பாசறை சார்பில் தமிழ்நாடு முழுவதும் இன்று (30.7.2026) முதல் 2.8.2026 வரை இரு சக்கர வாகனத்தின் மூலம் பரப்புரைப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டு முறைப்படி காவல்துறைத் தலைமை இயக்குநர் அவர்களிடம் (டிஜிபி), திராவிடர் கழகத்தின் சார்பில் கடந்த 18.7.2026 அன்று அனுமதி கேட்டு விண்ணப்பம் அளிக்கப்பட்டது.

எந்தெந்தப் பகுதிகளில் இரு சக்கரப் பிரச்சாரப் பயணம் மேற்கொள்ளப்பட உள்ளது என்ற பட்டியலும், அந்த விண்ணப்பத்தில் இணைக்கப்பட்டும் இருந்தது.

தாங்கள் பிரச்சாரப் பயணம் மேற்கொள்ளும் வழிகளில் உள்ள காவல் அலுவலகங்களில் சென்று அனுமதியையும், பாதுகாப்பும் பெற்றுக் கொள்ளுமாறு காவல்துறை தலைமை இயக்குநரிடமிருந்து 27.7.2026 நாளிட்ட கடிதம் (ந.க.எண்/4909650 பொது 2(2) 2026 நாள்: 27.7.2026) திராவிடர் கழகத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### காவல் துறையினரால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது!

அதன்படி, திராவிடர் கழகம் பரப்புரைப் பயணம் செல்லும் பகுதிகளில் உள்ள காவல் நிலையங்களில் ஆங்காங்கு திராவிடர் கழத்தின் சார்பில், விண்ணப்பிக்கப்பட்டு, அதற்கான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இரு சக்கர வாகனப் பயணம் இன்று (30.7.2026) காலை புறப்பட இருந்த இந்தத் தருணத்தில், திராவிடர் கழகத்தின் இரு சக்கர வாகனப் பயணத்திற்கு காவல் துறையினரால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

திராவிடர் கழகத்தைப் பொறுத்தவரையில், அரசியல் சாராத சமூகநீதியையும், சமூக சீர்திருத்தத்தையும் நோக்கமாகக் கொண்ட பகுத்தறிவு, சுயமரியாதை, சமத்துவ இயக்கமாகும்.



மக்களிடம் கருத்துகளைப் பரப்பி, விழிப்புணர்வை ஏற்படுத்துவது என்பது திராவிடர் கழகத்தின் அணுகுமுறையாகும்.

தந்தை பெரியார் காலத்திலிருந்து, அவர்களின் வழிகாட்டு முறையில், இதுதான் நடைமுறையாகும்.

### தொடர்ந்து போராட்டம்!

இப்பொழுது நடத்த திட்டமிட்டிருந்த ‘நீட்’ எதிர்ப்புப் பிரச்சாரப் பயணம் என்பதும், முதன்முறையல்ல. என்றைக்கு ‘நீட்’ அறிவிக்கப்பட்டதோ, அப்பொழுது முதலே (2010 ஆம் ஆண்டு முதல்) ‘நீட்’ எதிர்ப்புப் பிரச்சாரத்தைத் தொடர்ந்து நடத்தி வந்துள்ளது.

2017 இல் மார்ச் 18 முதல் 21 வரை அய்ந்து முனைகளில் இருந்து, அய்ந்து நாள்கள் ‘நீட்’ எதிர்ப்பு இரு சக்கர வாகனப் பரப்புரைப் பயணம் நடைபெற்றது.

2020 ஆம் ஆண்டு ‘நீட்’டை எதிர்த்து தொடர்ந்து பத்து நாள்கள் 2,700 கிலோ மீட்டர் தூரம் அளவுக்குக்கூட பரப்புரைப் பயணத்தை திராவிடர் கழகம் நடத்தியுள்ளது. நாமே (கி.வீரமணி) பங்கேற்று பரப்புரை நிகழ்த்தியுள்ளோம்.

மீண்டும் எமது தலைமையில் நாகர்கோயில் முதல் சென்னை வரை கூட இத்தகைய பரப்புரைப் பயணத்தைத் திராவிடர் கழகம் நடத்தியதுண்டு (3.4.2022 முதல் 25.4.2022 வரை).

2024 இல் (ஜூலை 11 முதல் 15 வரை) மீண்டும் அய்ந்து முனைகளிலிருந்து இரு சக்கர வாகனப் பரப்புரைப் பயணத்தைக் மாணவர் கழகத்தினர், கழக இளைஞரணியினர் நடத்தியுள்ளார்கள்.

எந்த ஆட்சிக் காலத்திலும் இத்தகைய சமூகநீதிப் பிரச்சாரப் பயணத்திற்கு அனுமதி மறுக்கப்பட்டதில்லை.

எந்தப் பிரச்சாரமும் சட்டத்திற்கு மாறாக திராவிடர் கழகம் நடந்ததில்லை.

போதிய அவகாசம் கொடுத்து, காவல்துறை அலுவலகங்களுக்கு அனுமதி கோரியிருந்தும், பிரச்சாரப் பயணம் புறப்படும் நாளில், அனுமதி மறுப்பது எந்த வகையிலும் உகந்த நடைமுறையல்ல.

இது கருத்துரிமைக்கும், பிரச்சார உரிமைக்கும் எதிரானதாகும்.

திராவிடர் கழகம் நடத்தும் பிரச்சாரமானாலும், போராட்டமானாலும், அதில் கிஞ்சிற்றும் சட்டம் - ஒழுங்குப் பிரச்சினைக்கு இடம் இல்லை. சட்டத்திற்குட்பட்டு, அறவழியில் செயல்பட்டு வந்திருக்கிறது என்பது கடந்த கால வரலாறு - இனியும் அதே நிலைதான் தொடரும்.

### இரு சக்கர வாகனப் பிரச்சாரப் பயணம் ஒத்தி வைக்கப்படுகிறது!

தடையை மீறி இந்தப் பிரச்சாரப் பயணத்தை நடத்த முடியும் என்றாலும், முதலில் சட்ட ரீதியாக இப்பிரச்சினையை கழகம் அணுகும்.

அரசியலமைப்புச் சட்டப்படியான நமது அடிப்படை கருத்து, பேச்சு, ஜனநாயக உரிமைக்கு நீதிமன்றத்தின்மூலமாகப் பரிகாரம் தேடப்படும்.

தற்போதைக்கு திராவிடர் கழகம் திட்டமிட்டிருந்த இரு சக்கர வாகனப் பிரச்சாரப் பயணம் ஒத்தி வைக்கப்படுகிறது.

### தோழர்கள் அமைதி காக்க வேண்டுகிறோம்!

நீதி கிடைக்காத ஒரு நிலை ஏற்படும் பட்சத்தில், தடையை மீறி, கழகத்தின் பிரச்சாரப் பயணம் நடைபெறும் என்பது உறுதி! உறுதி!!

தோழர்கள் அமைதி காக்க வேண்டுகிறோம்!

‘‘என்னுடைய போராட்டத்தின் வெற்றி தாமதமாகலாமே தவிர, ஒருபோதும் தோல்வி அடையாது’’ என்ற தந்தை பெரியாரின் கருத்தை நினைவு கொள்வோம்!

தந்தை பெரியாரை தமது ஆட்சியின் கொள்கை அடையாளமாக அறிவித்த த.வெ.க. ஆட்சி, ‘நீட்’ வேண்டாம் என்பது எங்கள் நிலைப்பாடு’ என்று அறிவித்த ஓர் ஆட்சி, அதற்கு மாறாக நடந்துகொள்வது மக்களின் அதிருப்தியைத்தான் சம்பாதிக்கும் என்பதை மறந்துவிட வேண்டாம்!

அதுவும், சமூகநீதிப் பிரச்சினையில் கை வைப்பது, சமூக விரோதச் செயலே என்பதைத் தற்போதைய ஆட்சியாளர்கள் நினைவில் நிறுத்தட்டும்!

அறவழியில் நடக்கவிருந்த நீட் தேர்வு எதிர்ப்பு விளக்கப் பிரச்சாரத்தைத் தடை செய்த தமிழ்நாடு அரசை வன்மையாகக் கண்டிக்கின்றோம்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# வாழ்வின் பெருங்கடல்!

(விருதுநகர் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மேனாள் செயலாளரும், மேனாள் அமைச்சருமான மறைந்த வே.தங்கபாண்டியன் அவர்களின் 29ம் ஆண்டு நினைவு நாளையொட்டி (31.07.2026) அவரது மகள் தமிழச்சி தங்கபாண்டியன் எழுதியுள்ள கவிதாஞ்சலி)



மல்லிகைச் சரமொன்றின்
மணம் சுமந்த காற்று
காதமர்ந்து ‘அப்பா’ என்கிறது.
தீக்குளவியொன்று
தான் கலைத்த காற்றில்
தடமற்றுப் பறக்கின்றது.
கால் தடங்கள்
மறைந்த கால வெளியில் அப்பாவின்
‘சார்லி சென்ட்’ மணம்
சுமந்த பவள மல்லிகள்
தலைகீழாக உதிர்ந்து கிடக்கின்றன.
அதன் துவண்ட காம்பொன்றில்
அவரின் கைவிரல் நரம்பின் சாயல்.
அரவமற்ற இப்பொழுதின் கனம்
குறைத்த மயிலின் அகவலொன்று
கேவல் சுமந்து தேம்புகிறது.
பகலின் அயற்சியுடன் இரவின் சுகம் கலக்கும்
கலவியின் சோர்வுடன் அந்தி விடைபெறுகின்றது.
நிலையாமையின் புதிர்
கொண்ட மினுக்கமுடன் நட்சத்திரமொன்று
நீள்தொலைவில் கண்சிமிட்டுகின்றது.
பயமற்றிருந்த குழந்தமையின் கம்பளியென
இருள் விலக்கி,
அப்பாவின் உள்ளங்கை நிலவென எழுகின்றது.

ஆறுதலும் தேறுதலுமற்ற அந்தரத்தில்
அப்பாவின் மாயக்கரம் பற்றி நிகழின்
துயர் மறக்கும் மகள்களுக்கும் –
நினைவின் பால்வெளியில் தனித்தலையும்
மகளைக் கனவில் தலைகோதும்
அப்பாக்களுக்குமானது –
வாழ்வின் பெருங்கடல்
இணைக்கும்
இவ்வுலகும் அவ்வுலகும் !



தமிழச்சி தங்கபாண்டியன்
எம்.பி.



மதுரவாயல் வடக்கு பகுதி அவைத் தலைவர் ஆர்.கர்ணல் தாயார் மறைந்த ஆர்.அன்னம்மாள் அவர்களின் உடலுக்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மதுரவாயல் தெற்கு பகுதி செயலாளர் காரம்பாக்கம் க. கணபதி,மண்டல குழு தலைவரும் மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், 145 வது வட்ட செயலாளர் நெற்கை ப.ஆலன் மற்றும் வட்ட செயலாளர்கள் கழக முன்னோடிகள் கலந்துகொண்டு மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

‘நீட்’ தேர்வை தடை செய்! உயர் சாதியினருக்கான EWS–ஐ தடை செய்!

# திராவிடர் கழகத்தின் பரப்புரைப் பயணத்திற்குத் தடை விதித்த த.வெ.க. அரசைக் கண்டிக்கிறோம்!

## த.பெ.தி.க. பொதுச் செயலாளர் கோவை கு.இராமகிருட்டிணன் அறிக்கை!

கோவை, ஜூலை 31

‘நீட் தேர்வை தடை செய்! உயர்சாதியினருக்கான EWS ஐ தடை செய்!’ என்ற முழக்கத்துடன் தமிழ்நாடு முழுவதும் பரப்புரைப் பயணம் செய்ய திராவிடர் கழகத்தினர் திட்டமிட்டு அதற்கான அனுமதிக் கடிதம் காவல்துறையினரிடம் விண்ணப்பித்திருந்தனர்.



இரு சக்கர வாகனப் பரப்புரைப் பேரணிக்கு த.வெ.க. அரசு அனுமதி அளிக்காமல் தடை செய்துள்ளதை தந்தை பெரியார் திராவிடர் கழகம் வன்மையாக கண்டிக்கிறது.

தத்துவத் தலைவர்களாக தந்தை பெரியார், புரட்சியாளர் அம்பேத்கர், பெருந்தலைவர் காமராஜர் ஆகியோரை வைத்துள்ள இன்றைய த.வெ.க. அரசு சமூக நீதிக்காக நடைபெறவிருந்த பரப்புரைப் பயணத்தை தடுத்துள்ளது.

தந்தை பெரியார் அவர்கள் திராவிடர் கழகத்தை தொடங்கிய காலத்தில் இருந்து பரப்புரைப் பயணங்கள் நடந்து வருகிறது. முன்பு ஆண்ட எந்த அரசும் பரப்புரைப் பயணத்திற்கு தடை விதித்ததில்லை. சமூக நீதி பிரச்சாரத்தை தடை செய்த எந்த அரசும் தமிழ்நாட்டில் நிலைத்ததில்லை.

இவ்வாறு தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கோவை கு.இராம கிருட்டிணன் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா வி. கிருஷ்ணன்

ஜூலை 31 (2011)



இராயபுரம் ‘ராபின்சன்’ பூங்காவில் 1949–ல் கழகம் துவக்கப்பட்ட பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, அன்று முதல் கழகப் பணியாற்றி வந்தவர்.

இராயபுரம் பகுதியில் வட்டக் கழகச் செயலாளராகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும் கழகப் பணியாற்றியவர்.

துறைமுகத் தொழிலாளியான இவர், தொ.மு.ச.பேரவையின் கீழ் இயங்கும் ‘துறைமுக தொழிலாளர் சங்கத்தை உருவாக்கியதோடு, தொழிலாளர் கூட்டுறவு சங்க தலைவராக பொறுப்பு வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் பங்கு பெற்றதோடு, நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் சென்னை மத்திய சிறையில் ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

துவரங்குறிச்சி நகரக் கழக அவைத் தலைவர்

# அப்துல் மாலிக் தாயார் - கவிஞர் சல்மா எம்.பி.யின் மாமியார் திருமதி ஜமீலா பீவி மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல் !

சென்னை, ஜூலை 31–

துவரங்குறிச்சி நகரக் கழகத் தலைவர் அப்துல் மாலிக்கின் தாயாரும், கவிஞர் சல்மா எம்.பி.யின் மாமியாருமான திருமதி ஜமீலா பீவி அவர்கள் நேற்று இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தி அறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

துவரங்குறிச்சி நகரக் கழக அவைத் தலைவர் அப்துல் மாலிக் அவர்களின் தாயாரும் கழக மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் சல்மா அவர்களின் மாமியாருமான திருமதி ஜமீலா பீவி அவர்கள் மறைந்த செய்தியறிந்து வேதனையடைந்தேன்.

அன்னாரை இழந்து தவிக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

சிவகங்கை நகரில்

# ரூ. 5 லட்சம் செலவில் சி.சி.டி.வி. கேமரா!

## நகர் மன்றத் தலைவர் துரை ஆனந்த் இயக்கி வைத்தார்!

சிவகங்கை, ஜூலை 31–

சிவகங்கை நகராட்சி சார்பில் நகராட்சி பொது நிதியிலிருந்து ரூபாய் 5 லட்சம் செலவில் நகர் பேருந்து நிலையம், தொண்டி மேம்பாலம் மதுரை சந்திப்பு உட்பட நகரின் பல்வேறு முக்கிய பகுதிகளில் சி.சி.டிவி கேமரா அமைத்து தருமாறு காவல்துறை வேண்டு கோளின் பேரில் அமைக்கப்பட்டுள்ளது

இந்த சி.சி.டிவி. கேமரா இயக்கும் பணியினை நகர்மன்ற தலைவர் சி.எம்.துரை. ஆனந்த் துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் நகராட்சி ஆணையாளர் அசோக்குமார் புறக்காவல் நிலைய சப்–இன்ஸ்பெக்டர் சவுரிமுத்து, நகர் மன்ற உறுப்பினர் வீனஸ் ராம நாதன், நகராட்சி பொறியாளர் மீராஅலி, ஒப்பந்தக்காரர் தினேஷ், சுகாதார ஆய்வாளர் அன்புச்செழியன் சுகாதார ஆய்வாளர் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இதன் மூலம் நகரில் உள்ளே வரும் வாகனங்கள் வெளியே செல்லும் வாக னங்கள் சி.சி.டி.வி. கேமரா மூலமாக பதிவு செய்யப் பட்டு கண்காணிக்கப்படும்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வெ. இரத்தினம்

ஜூலை 31 (1985)



1939ல் நீதிக்கட்சியிலும், 1944ல் திராவிடர் கழகத்திலும் தீவிரமாக பணியாற்றி, பின்னர் கழகம் துவக்கப்பட்டபோது கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

1951 முதல் 1980 வரை மதுரை மாவட்ட பிரதிநிதியாக கழகத்தில் பொறுப்பு வகித்து பணியாற்றியவர்.

தனது இளமைப் பருவத்திலேயே திராவிடர் கழக பற்றாளராக இருந்த காரணத்தால், சாதிஒழிப்பு, கலப்பு திருமணம் ஆகியவற்றை தனது வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தி, அப்பகுதி மக்களுக்கு எடுத்துக்காட்டாய் விளங்கி, திராவிட இயக்க கொள்கைகளை தன் பகுதியில் வளர்த்தவர்.

கழகம் நடத்திய பல போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.